1984 மார்ச் 12]

நானும்கூட திருச்சியில் போய், சேதம் அடைந்த, பழுது அடைந்த வீடுகளைப் பார்த்தேன். நெசவாளர்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகள் மட்டுமல்ல, இந்தத் தடவை கடுமையாகப் பெய்த மழையின் காரணமாக தனியார்களால் கட்டப் பட்டிருந்த பெரிய மாளிகைகள் கூட பல சேதமாகி இருக்கின்றன. எனினும், சேதம் அடைந்துபோன அந்த வீடுகளின் சொந்தக்காரர்களாக இருக்கின்ற நெசவாளப் பெருமக்களுக்கு உதவும் விதத்தில் அரசு, அவர்கள் பெற்றிருக்கின்ற கடன்களை எந்த அளவிற்கு அவர்களுக்கு உதவும் விதத்திலே முடிவு செய்ய முடியும் என்பதைப் பற்றி அரசு ஆலோசிக்கும் என்று ஏற்கனவே பதில் சொன்னேன்.

திரு. பி. கந்தசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, ஆதி திராவிடர்களுக்கு மானிய அடிப்படையில் வீடு கட்டித் தருவதைப் போல நலிந்துள்ள நெசவாளர் குடும்பங்களுக்கும் மானிய அடிப்படையில் வீடுகள் கட்டித்தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது கட்டப்படும் வீடு களுக்கு ஆயிரம் ரூபாய் மானியமாகக் கொடுக்கப்படுகிறது. அது தான் இப்பொழுதுள்ள திட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க வினா எண்கள் 281, 282, 283, 284 ஆகியவை தள்ளிவைக்கப்படுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற் றது என்பதைக் குறிக்கும்.]

TRUTH ALONE TRIUMPHS

2. தகவல் கோரல்.

(அ) ஓர் உறுப்பினரின் மாமனார் மோசடி செய்துள்ளதாக பத்திரிகையில் வந்துள்ள செய்தி.

திரு.மி.வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் ''எதிரொலி'' பத்திரிகையில் நாஞ்சில் வின்சென்ட்டின் மாமனார் ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் மோசடி செய்தார் என்று அதாவது நாஞ்சில் வின்செண்ட்டின் தூண்டுதலின் பேரில் அவருடைய மாமனார் தங்கப்பன் என்பவர் 4 ஏக்கர் நிலத்தை விற்பதாக கூறி ஒரு இலட்சத்தி நாற்பதாயிரம் ரூபாயை

கன்னியாகுமரி மாவட்டம் செம்பன்விளையைச் சேர்ந்த எஸ். துரைராஜ் என்பவரிடமிருந்து வாங்கி மோசடி செய்து விட்டார் என்று செய்தி வந்திருக்கின்றது..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிப்பட்ட செய்திகளை எல்லாம் இங்கு வந்து சொல்ல வேண்டியதில்லை. கோர்ட்களில் சென்று சொல்ல வேண்டிய பிரச்சினைகளை இங்கு வந்து சொல்வதால் பயன் இல்லை. (கூச்சல், குழப்பம்).

(முற்பகல் 10-00)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்சென்ட் அவர்கள் கூறியது சட்டமன்றத்தைப் பொறுத்த பிரச்சினை அல்ல. தனிப்பட்ட முறையில் வந்துள்ள பிரச்சினை இது. அவர் பக்கம் நியாயம் இருக்கலாம். ஆகவே இப்பிரச்சினையை நீதிமன்றத்திற்குக் கொண்டுபோய் நீதியை நிலைநாட்ட வேண்டிய முழுப் பொறுப்பும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உள்ளது. அவையிலே இப்படிப்பட்ட பிரச்சினைகளை எல்லாம் எழுப்புவதற்கு இடம் அளித்து விட்டால், அம்மாதிரி நிலைமைகள் வளர்ந்துவிட்டால் பின்னர் அவையைச் சமாளிக்க முடியாத நிலைமைதான் ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே ஒரு வழக்கறிஞர். ஆகவே அவரிடத்திலே வந்து பிறர் யோசனை கேட்டால் அவர்களுக்கு யோசனை சொல்ல வேண்டிய நிலைமையிலே இருப்பவர் அவர். ஆகவே அவர் இந்தப் பிரச்சினையை இங்கு கிளப்பாமல் முறைப்படி அதற்கான நடவடிக்கை என்ன எடுக்கவேண்டுமோ அதை எடுக்க வேண்டும் என்று நான் பேரவை தலைவர் அவர்களின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆ. கருநாடக மாநிலம் பெங்களூரில் நிலவும் கலவரத்தன்மை.

திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களாக பத்திரிகையில் வருகின்ற செய்திகளைப் பார்க்கிறோம். கர்நாடக மாநிலத்திலுள்ள பெங்களூரில் ஊரடங்கு உத்தரவு, போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம், அடிதடி, கலவரம் என்றெல்லாம் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அங்கு என்ன நடக்கின்றன என்பதை இங்குள்ள அனைவரின் கவனத்திற்கும் கொண்டுவர வேண்டும். காரணம், அங்கே இலட்சக்கணக்கான தமிழர்கள் இருக்கின்றார்கள். ஆகவே அங்கே இருக்கின்ற அந்தத் தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கின்றதா, அதுகுறித்து நம்முடைய அரசு கர்நாடக மாநில அரசோடு தொடர்பு கொண்டு இருக்கின்றதா என்பன பற்றிய செய்திகள் ஏதேனும் அரசினிடத்திலே இருக்கின்றனவா..

TRUTH ALONE TRIUMPHS